


**26.02.2024**

## 09. தன்னைக்குறித்த மேன்மையான "தன்னுணர்வு" தேவனை இழந்திடும்!

பெருமைக்கு இதுதான் அளவு என்று இல்லை! அது அத்தனை விஸ்தாரமானது! பெருமை எப்போதுமே, தன் பெருமைக்கு காரணமாயிருப்பவைகளால் "தன்னுணர்வைப்" பெற்றிருக்கும். தன் பணம், செல்வாக்கு, அந்தஸ்து, ஆஸ்தி, சரீர அழகு, சுபாவமான சில நற்குணங்கள், தான்பெற்ற வெற்றிகள், தாலந்துகள்..... ஆகிய அவனுக்குரிய யாவற்றிலும் "தன்னுணர்வு" கொண்டவனாய் "அதில்" பெருமை கொண்டிருப்பான்! இவர்களைத் தேவனே எதிர்த்து நிற்கையில் 'அந்த அழகினிமித்தமும்' 'அந்த அவர்களின் ஐஸ்வரியத்தினிமித்தமும்' 'அந்த அவர்களின் பதவியினிமித்தமும்' தன்னுணர்வில் ஈர்க்கப்பட்டவனாய் மாறிவிட்டால், தேவனே எதிர்த்து நிற்கும் "தேவனில்லாத இடத்திற்கே நாம் நகர்ந்து செல்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

– ரத்னம்